கல்வி அமுது http://kalviamuthu.blogspot.com

7401 Reg. No.

# மேல்நிலை இரண்டாமாண்டு அரையாண்டு பொதுத் தேர்வு, டிசம்பர் - 2017

நேரம் : 3.00 மணி) பகுதி-I தமிழ் முதல் தாள் (மொத்த மதிப்பெண்கள் : 100

(செய்யுளும் இலக்கணமும்)

## Language - Part I - Tamil - Paper I

அறிவுரை : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : 1. விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

2. வினா எண் VI-க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகளில் விடை எழுதுக : 4×2=8

1. மறுதரவுப் பத்து – விளக்குக.
2. "வேண்டாரை வேண்டா உலகு". – வள்ளுவர் வழிநின்று விளக்குக.
3. தமிழரசி குறவஞ்சியின் அரங்கேற்றம் பற்றிக் கூறுக.
4. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை ?
5. மேகக் கூட்டங்கள் எவ்வாறெல்லாம் உருவகம் செய்யப் பெறுகின்றன ?
6. 'சுந்தரர்' – குறிப்பு வரைக.

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : 3×4=12

7. இந்தியர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நாமக்கல் கவிஞர் கூறுகிறார் ?
8. வினைமேற் சென்ற தலைவனிடம் தூதுவந்த பாணன் தெரிவித்த செய்தி யாது?
9. அறிவுடையாரின் இலக்கணங்களாக வள்ளுவர் கூறுவனவற்றை எழுதுக.
10. 'உண்டுகொல்' என்னும் முறையில் கண்ணகி சினந்து கூறியன யாவை ?
11. தாவீதன் கோலியாத்துக்கு உரைத்த மறுமொழி யாது ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : 3×4=12

12. திருவேங்கடமலையைவிடச் சிறந்த செல்வம் வேறெதுவும் இல்லை என்பதனைப் பிள்ளைபெருமாள் ஐயங்கார் எவ்வாறு விளக்குகிறார் ?
13. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை ?
14. சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை ?
15. அறிவர்க்கும் அறிவனாகிய அருகதேவனை நீலகேசி வழிபட்டமை எவ்வாறு ?
16. மணிமேகலா தெய்வம் புத்தபிரானைப் போற்றி செய்தமை யாங்ஙனம் ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில் விடை எழுதுக: 1×8=8

17. பொறையுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
18. இராவணன் வருகையும் அதன்பின் நிகழ்ந்தனவுமாகிய செயல்களையும் அனுமன் உரைத்த பாங்கினை இருபது வரிகளில் எழுதுக.
19. இளைய சமுதாயம் விழிப்புற்றெழ கவிஞர் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்தெழுதுக.

V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக: 4×1=4

20. "தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே"
அ) இச்செய்யுளடிகளை இயற்றியவர் யார் ?
ஆ) இச்செய்யுளடிகள் இடம் பெற்ற நூல் எது ?
இ) ஆரல் என்பது எதனைக் குறிக்கும் ?
ஈ) ஒழுகுநீர் பொருள் தருக. (அல்லது)

21. "உனைஒன்று வேண்டுகின்றேன் என்னால் ஆவ
துண்டென்றால் அதற்கென்றன் உயிருண் டென்றான்"
அ) இப்பாடலடிகள் எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?
ஆ) இப்பாடலடிகளை இயற்றியவர் யார் ?
இ) தலைவன் யாரிடம் வேண்டுகின்றான் ?
'என் உயிர் உண்டு' என்றவன் யார் (கருக)

VI 22. "வெல்வை"... எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடலைஅடிபிறழாமல் எழுதி அதன் பாவகையையும் சுட்டுக. 4+2=6

23. 'எழுமை' எனத் தொடங்கும் குறளையும், 'நோய்' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக. 2+2=4

(திருப்புக

VII 24. எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக : 2×2=4
அ) பெய்த ஆ) ஏந்தி இ) புக்கேன் ஈ) காண்கிலர் உ) முழங்கிய
ஊ) தேடுகிறாய்

25. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக: 3×2=6
அ) திருந்துமொழி ஆ) உண்மின் இ) தழீஇ ஈ) விக்கி விக்கி
உ) பசிக்கயிறு ஊ) கன்னி பாலன்

26. எவையேனும் இரண்டு தொடர்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக : 2×2=4
அ) யாருமில்லை ஆ) நிறையுடைமை இ) பெருந்தெய்வம் ஈ) மறவேல்
உ) வளைத்தோளி ஊ) விருந்தொரால்

27. சான்று தந்து விளக்குக : 1×4=4
பொருண்மொழிக் காஞ்சித் துறை (அல்லது) குறிஞ்சித் திணை

28. "இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை" 1×4=4
- இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக (அல்லது)
சொற்பொருட் பின்வருநிலையணி (அல்லது)
தற்குறிப்பேற்ற அணி - சான்று தந்து விளக்குக.

VIII பொருத்துக : 4×1=4

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| 29. | இருண்ட வீடு | - | சுரதா |
| 30. | தேன்மழை | - | தாராபாரதி |
| 31. | தமிழ்-பிரஞ்சு கையகர முதலி | - | பாரதிதாசன் |
| 32. | பூமியைத் திறக்கும் பொன்சாவி | - | வாணிதாசன் |

IX உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16×1=16

33. 'ஒன்றேயென்னின்' என்னும் கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ள காண்டம்
அ) அயோத்தியா காண்டம் ஆ) சுந்தர காண்டம் இ) யுத்த காண்டம்

34. பின்பனிக் காலம் :
அ) மார்கழி, தை ஆ) மாசி, பங்குனி இ) சித்திரை, வைகாசி

35. நற்றிணைப் பாக்களின் அடிவரையறை :
அ) 4 அடி முதல் 8 அடி வரை ஆ) 9 அடி முதல் 12 அடி வரை
இ) 13 அடி முதல் 31 அடி வரை

36. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது :
அ) பழமொழி ஆ) திருவள்ளுவமாலை இ) நாலடியார்

37. பொருட்பாலின் இயல்கள் :
அ) பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்
ஆ) அரசியல், அங்கவியல், ஒழிபியல் இ) களவியல், கற்பியல்

38. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு :
அ) படலம் ஆ) இயல் இ) காதை

39. அனுமனுக்கு இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் :
அ) வித்தகன் ஆ) சுந்தரன் இ) அண்டர்நாயகன்

40. கிறித்தவ சமயத்தாரின் கலைக் களஞ்சியம் :
அ) திருக்காவலூர் கலம்பகம் ஆ) கித்தேரியம்மாள் அம்மானை இ) தேம்பாவணி

41. 'கவிச்சக்கரவர்த்தி', 'கவிராட்சசன்' என்றெல்லாம் புகழப்படுபவர் :
அ) கம்பர் ஆ) ஒட்டக்கூத்தர் இ) இளங்கோவடிகள்

42. பதினெட்டு உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம் :
அ) கலம்பகம் ஆ) உலா இ) பள்ளு

43. எழுவகைப் பருவப்பெண்களின் வயது முறையில் மடந்தைப் பருவப் பெண்ணின் வயது எல்லை : அ) 8-11 அ) 12-13 இ) 14-19

44. 'வேலைகள் அல்ல வேள்விகளே' என்னும் பாடல் இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு
அ) இது எங்கள் கிழக்கு ஆ) இமயம் எங்கள் காலடியில் இ) சுட்டு விரல்

45. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருதுபெற்ற கவிஞர் :
அ) அப்துல் ரகுமான் ஆ) சுரதா இ) தாராபாரதி

46. வடமொழியில் பாரதம் பாடியவர் :
அ) வான்மீகி ஆ) வியாசர் இ) காளிதாசர்

47. இரட்சணிய மனோகரம் என்ற நூலின் ஆசிரியர் யார் ?
அ) ஜி.யு. போப் ஆ) எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை இ) வீரமாமுனிவர்

48. முதுமொழி மாலை என்னும் நூலின் ஆசிரியர் :
அ) உமறுப் புலவர் ஆ) சுந்தரர் இ) சீத்தலைச் சாத்தனார்

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2×2=4

49. ஒறுத்தாரை யொன்றாக ------ வைப்பர்
பொறுத்தாரைப் ------- பொதிந்து.

50. அஞ்சுவ தஞ்சாமை ----- அஞ்சுவ
தஞ்சல் அறிவார் -------.